# சான்றாளரின் சாட்சிய வாக்குமூலம்
(DEPOSITION OF WITNESS)

மேற்கோள்:- 1. குற்றவியல் நடைமுறை விதிகளின் 42-ஆம் விதி, 53-ஆம் நீதிமன்ற படிவம்
(Rule 42 and Judicial from No. 53 of Criminal Rules of Practice)
2. குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டத்தின் XXIII-ஆம் அத்தியாயம்
(Chapter XXIII Code of Criminal Procedure)

## மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, சேலம்
(IN THE COURT
OF THE III-ADDITIONAL DISTRICT SESSIONS JUDGE, SALEM).

| | | |
|---|---|---|
| **வழக்கு எண்** | :- | **S.C.No.301/2017** |
| **வாக்குமூலம் அளிக்கும் சான்றாளரின் வரிசை எண்** | :- | **அ.சா- 13 ( PW- 13 )** |
| **பெயர்** | :- | **குமரன்** |
| **கணவரின்/தகப்பனாரின் பெயர்** | :- | |
| **ஊர்** | :- | |
| **வருவாய் வட்டம்** | :- | |
| **சமூகம் (சாதி)** | :- | |
| **தொழில்** | :- | |
| **மதம்/சமயம்** | :- | |
| **வயது** | :- | |

**2026–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 17 ஆம் நாள் 1969–ஆம் ஆண்டில் ஆணையுறுதிச் சட்டத்தின் (நடுவன் சட்டம் 44/1969) வகையங்களுக்கு இணங்க சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

சான்றாளரின் கையொப்பம்

எதிரிகள் தோன்றினார்கள். எதிரிகளின் வழக்குரைகுர் தோன்றினார்.

**முதல்விசாரணை**

நான் தமிழ்நாடு காவல் துறையில் திருப்பத்தூர் மாவட்டத்தில் மாவட்ட குற்ற ஆவண காப்பகத்தில் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிகிறேன்.

22.08.2016-ஆம் தேதியன்று ஏற்காடு காவல் நிலைய காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது அந்த காவல் நிலைய குற்ற எண் 130/2016 வழக்கை காவல் உதவி ஆய்வாளர் புலனாய்விற்காக என் பார்வைக்கு வைத்தார். நான் முதல் தகவல் அறிக்கை பரிசீலித்தபின் வழக்கை புலனாய்விற்கு எடுத்துக் கொண்டு சம்பவ இடமான மாரமங்கலம், காளியம்மன் கோவிலுக்கு அருகில் உள்ள மாணிக்கம் என்பவருக்கு சொந்தமான விவசாய நிலத்திற்கு சென்று சான்றாளர்கள் தியாகராஜ், முரளி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை 17.00 மணிக்கு பார்வையிட்டு பார்வை மகசரும் மாதிரி வரைபடமும் தயாரித்தேன். மாதிரி வரைபடம் **அ.சா.ஆ-12** ஆக குறியீடுச் செய்யப்படுகிறது.

தொடர்ந்து 18.00 மணிக்கு அதேச் சான்றாளர்கள் முன்னிலையில் குப்புசாமி என்பவர் இறந்துகிடந்த இடத்தில் இருந்து இரத்தம் படிந்த மண் சிறிதளவையும் இரத்தை படியாத மண் சிறிதளவையும் மாதிரிக்காக எடுத்து பொட்டலம் கட்டி மகசரில் கைப்பற்றினேன். அவை முறையே **அ.சா.பொ-15, 16** ஆக குறியீடுச் செய்யப்படுகின்றன. மேலும் அந்த இடத்தில் கிடந்த கருப்பு நிற வார் பட்டை கொண்ட Sony என்ற பெயர் உள்ள கைக்கடிகாரத்தை அதேச் சான்றாளர்கள் முன்னிலையில் அதே மகசரில் கைப்பற்றினேன். அந்த கடிகாரம் ஏற்கனவே அ.சா.பொ-01 ஆக குறியீடுச் செய்யப்பட் டிருக்கிறது. இரத்த கறை படிந்த நீல நிற வார் பட்டை கொண்ட Rubber

செருப்பு ஓரிணையை அதே மகசரில் கைப்பற்றினேன். அது ஏற்கனவே அ.சா.பொ-02 ஆக குறியீடுச் செய்யப்பட்டிருக்கிறது.

பிரேத விசாரணை செய்வதற்காக பஞ்சாயத்தார்கள் மற்றும் சான்றாளர்களுக்கு அழைப்பாணை கொடுத்தேன். 18.30 மணிமுதல் 21.30 மணிவரை அந்த இடத்தில் பிரேத விசாரணை மேற்கொண்டு அறிக்கை தயாரித்தேன். அந்த அறிக்கை **அ.சா.ஆ-13** ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. தொடர்ந்து சான்றாளர்கள் மாது, தங்கராஜ், குமார் -01, சகுந்தலா, குமார்-02, தியாகராஜ், முரளி ஆகியோரை தனிதனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு -செய்தேன்.

தொடர்ந்து குப்புசாமி சடலத்தை சடலக்கூராய்வு செய்து அறிக்கை பெறுவதற்காக வேண்டுகோள் கடித்தத்துடன் சடலத்தை தலைமை காவலர் மூர்த்தி மூலம் சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன்.

23.08.2016-ஆம் தேதியன்று சடலக்கூராய்வு முடிந்தபிறகு சடலத்தில் இருந்து மருத்துவர் எடுத்துக் கொடுத்த இரத்தம் படிந்த நீலநிற ஜட்டி ஒன்றை தனி அறிக்கை மூலம் தலைமை காவலர் மூர்த்தி என்னிடம் ஒப்படைத்தார். அதை உரிய படிவம் மூலம் அதிகாரவரம்புள்ள நீதித்துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பினேன். சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்ட தடங்களை உரிய படிவம் மூலம் மேற்சொன்ன நீதிமன்றத்திற்கு அனுப்பினேன்.

24.08.2016-ஆம் தேதியன்று காலை 07.00 மணிக்கு மாரமங்கலம் பேருந்து நிறுத்தத்திற்கு அருகில் நின்ற 01-ஆம் எதிரி ராஜாங்கத்தை கைதுசெய்து சான்றாளர்கள் தியாகராஜ், முரளி ஆகியோர் முன்னிலையில்

அவர் தன்னிச்சையாக சொன்ன ஒப்புதலுரையை 07.00 மணிமுதல் 09.00 மணிவரை பதிவுசெய்தேன். **அதில் என்னை அழைத்துச் சென்றால் சம்பவத்தில் பயன்படுத்திய நாட்டு துப்பாக்கியின் உடைந்த பகுதிகள், சம்பவத்தின்போது தான் அணிந்திருந்த ஆடைகள் ஆகியவற்றை எடுத்துக் கொடுப்பதாக சொன்னார்.** மேற்சொன்ன பகுதி **அ.சா.ஆ-14** ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. தொடர்ந்து 9.30 மணிக்கு அதேச் சான்றாளர்கள் முன்னிலையில் 01-ஆம் எதிரி ராஜாங்கம் மாரமங்கலம் ஊரில் உள்ள அவரது நிலத்திற்கு அருகில் உள்ள கரட்டு அடிவாரத்தில் இருந்து எடுத்துக் கொடுத்த 114 செ.மீ நீளமும் 06 செ.மீ விட்டமும் கொண்ட SBBL என்று எழுதப்பட்டிருந்த நாட்டு துப்பாக்கியின் இரும்பு குழாய் ஒன்று, கை அழுத்தியுடன் கூடிய 25 செ.மீ நீளமுள்ள உடைந்த கட்டை ஒன்று, சுமார் 32 செ.மீ, 17 செ.மீ, 11 செ.மீ, 09 செ.மீ நீளங்கள் கொண்ட துப்பாக்கி -யின் உடைந்த மரத்துண்டுகள், சுமார் 12 செ.மீ சுற்றளவுள்ள பித்தளை வளையம் ஒன்று, கிழிந்த நிலையில் இரத்தகறை படிந்த கை வைத்த கருப்பு நிற பனியன் ஒன்று ஆகியவற்றை ஒப்புதலுரை சான்றாளர்கள் முன்னிலை -யில் மகசரில் கைப்பற்றினேன்.

ஏற்கனவே இந்திய தண்டனை தொகுப்புச் சட்டத்தின் 302-ஆம் பிரிவின்கீழ் தண்டிக்கத்தக்கக் குற்றத்திற்காகவும் ஆயுதங்கள் சட்டத்தின் 25(1B)-ஆம் பிரிவின்கீழ் தண்டிக்கத்தக்கக் குற்றத்திற்காகவும் வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்தது. அதை நான் இந்திய தண்டனை தொகுப்புச் சட்டத்தின் 302-ஆம் பிரிவின்கீழ் தண்டிக்கத்தக்கக் குற்றம், ஆயுதங்கள் சட்டத்தின் 07-ஆம் பிரிவுடன் உடனிணைந்த 27(3)-ஆம் பிரிவின்கீழ் தண்டிக்கத்தக்கக் குற்றங்களுக்கான வழக்காக மாற்றி அறிக்கை தாயாரித்து அதிகாரவரம்புள்ள நீதித்துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பினேன். அந்த

அறிக்கை **அ.சா.ஆ-15** ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. 01-ஆம் எதிரி ராஜாங்கத்தை காவல் நிலையத்திற்கு கொண்டுவந்து உரிய சோதனைக்கு -பிறகு நீதிமன்ற காவலில் வைக்க வழிக்காவலிடம் ஒப்படைத்தேன். அவர் எடுத்துக் கொடுத்து கைப்பற்றிய வழக்குச் சொத்துக்களை உரிய படிவத்தில் உரிய நீதிமன்றத்திற்கு அனுப்பினேன்.

தொடர்ந்து சான்றாளர்கள் தியாகராஜ், முரளி ஆகியோரை விசாரித்து மறு வாக்குமூலம் பதிவுசெய்தேன்.

25.08.2016-ஆம் தேதியன்று காலை 09.00 மணிக்கு சாமியாபுரம் கூட்டுச்சாலையில் 02-ஆம் எதிரி சேகர் வீடு இருந்த இடத்தில் அவரை கைதுசெய்தேன்.

சான்றாளர்கள் தியாகராஜ், முரளி ஆகியோர் முன்னிலையில் அவர் தன்னிச்சையாக சொன்ன ஒப்புதலுரையை 09.00 மணிமுதல் 10.00 மணிவரை பதிவுசெய்தேன். **அதில் நாட்டு துப்பாக்கி தயாரிப்பதற்கு தேவையான உபகரணங்களான துப்பாக்கி மாதி கட்டை, சிறிய சுத்தி, ஆக்சா பிளேடு பிரேமுடன் உள்ளது. சிறிய கை ரம்பம், இரும்பு சுரண்டி, பட்டை உளி, இரும்பு இளைப்புளி, துப்பாக்கி இரும்பு பேரல் ஆகியவற்றை எனது வீட்டில் வைத்திருக்கிறேன் என்றும் அதை எடுத்துக் கொடுக்கிறேன் என்றும் சொன்னார்.** மேற்சொன்ன பகுதி **அ.சா.ஆ-15** ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. தொடர்ந்து 10.30 மணிக்கு அதேச் சான்றாளர்கள் முன்னிலையில் 02-ஆம் எதிரி சேகர் அவரது வீட்டில் இருந்த எடுத்துக் கொடுத்த மேற்சொன்ன பொருட்களை அதேச் சான்றாளர்கள் முன்னிலையில் மகசரில் கைப்பற்றினேன்.

ஆயுதங்கள் சட்டத்தின் 25(1)(a)-ஆம் பிரிவின்கீழ் தண்டிக்கத்தக்கக் குற்றத்தையும் சேர்த்து அறிக்கை தாயாரித்து அதிகாரவரம்புள்ள நீதித்துறை

குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பினேன். அந்த அறிக்கை **அ.சா.ஆ-16** ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. 02-ஆம் எதிரி சேகரை காவல் நிலையத்திற்கு கொண்டுவந்து உரிய சோதனைக்குபிறகு நீதிமன்ற காவலில் வைக்க வழிக்காவலிடம் ஒப்படைத்தேன். அவர் எடுத்துக் கொடுத்து கைப்பற்றிய வழக்குச் சொத்துக்களை உரிய படிவத்தில் உரிய நீதிமன்றத்திற்கு அனுப்பினேன்.

26.08.2016-ஆம் தேதியன்று சான்றாளர்கள் குப்பாயி, தீபா, கண்ணகி, மாணிக்கம், மாது ஆகியோரை தனிதனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 13.09.2016-ஆம் தேதியன்று இந்த வழக்கில் சடக்கூராய்வு செய்துபோது இறந்தவரின் பெயரை சேகரிக்க இடது கால் தொடையில் துப்பாக்கியால் சுட்டு இரத்த காயத்துடன் சேகரித்த தோள்பகுதி, இடதுகை உள்ளங்கையின் துப்பாக்கியின் கரிமருந்து அடையாளம் இருந்த பகுதி, இறந்தவரின் உடல்நிலையில் இருந்து எடுக்கப்பட்ட ரவைகுண்டுகள் ஆகியவற்றை சென்னை தடய அறிவியல் ஆய்வத்திற்கு இராசன பரிசோதனைக்காக அனுப்பி வைக்க சேலம் அரசு மருத்துவமனையின் பேராசிரியர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் அனுப்பினேன். அன்றே இவ்வழக்கில் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட நாட்டு துப்பாக்கியின் உடைந்த பாகங்களை சென்னை தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்ப வேண்டி சேலம் 05-ஆம் நீதித்துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

16.09.2016-ஆம் தேதியன்று இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட இரத்தம் கலந்த மண் சிறிதளவும் இரத்தம் கலக்காத மண் சிறிதளவும் இறந்துபோன குப்புசாமி அணிந்திருந்த இரத்தகறை படிந்த நீலநிற கால்சட்டை, கிழிந்த

நிலையில் இருந்த ஜட்டி ஒன்றும், சம்பவத்தின்போது 01-ஆம் எதிரி ராஜாங்கம் அணிந்திருந்த கருப்பு நிற கிழிந்த பனியன் ஒன்றும் சேலம் தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்ப வேண்டி சேலம் 05-ஆம் நீதித்துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு வேண்டுகோள் கடிதம் அனுப்பினேன்.

15.09.2016-ஆம் தேதியன்று இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட தடங்களை நீதித்துறை குற்றவியல் நடுவர் நீதிமன்ற ஆணைப்பிறப்பித்து தலைமை காவலர் மூர்த்தி 780 சேலம் தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்து இரசீது ( இரசீது எண் SLM/Biol/508/2016 நாள் 15.09.2016) பெற்று காவல் நிலையம் வந்து அறிக்கை சமர்ப்பித்தேன்.

19.09.2016-ஆம் தேதியன்று இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட துப்பாக்கியின் பாகங்கள் சென்னை தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்து இரசீது (இரசீது எண் Ball 129/2016, 130/2016 நாள் 19.09.2016) பெற்று காவல் நிலையம் வந்து அறிக்கை சமர்ப்பித்தேன்.

24.09.2016-ஆம் தேதியன்று இந்த வழக்கின் சான்றாளர்கள் சடக்கூராய்வு செய்த மருத்துவர் கோகுலரமணன், 780 எண் கொண்ட தலைமை காவலர் மூர்த்தி, முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்த காவல் உதவி ஆய்வாளர் ஹரிஹரன் ஆகியோர்களை தனிதனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன்.

அதன்பிறகு பணிமாறுதலில் சென்றதால் வழக்கு கோப்புகளை காவல் நிலைய எழுத்தர் வசம் ஒப்படைத்தேன்.

**02-ஆம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

02-ஆம் எதிரி சேகரிடமிருந்து 01-ஆம் எதிரி ராஜாங்கம் எப்போது துப்பாக்கி வாங்கினார் என்று என்னுடைய புலனாய்வில் தெரியவந்ததா என்றால் தேதி குறிப்பிட்டு தெரியவரவில்லை. சம்பவதிற்குமுன் வாங்கியதாக தெரியவருகிறது. 02-ஆம் எதிரியிடமிருந்து கைப்பற்றப் -பட்டதாக நான் சொல்லியுள்ள பொருட்களை பகுப்பாய்விற்கு அனுப்ப-வில்லை என்றால் சரிதான். 02-ஆம் எதிரி துப்பாக்கி பழுதுப் பார்க்கும் தொழில்செய்கிறார் என்று தெரிந்துக்கொண்டேன். உரிமம் பெற்றுதான் அந்த தொழிலைசெய்கிறார் என்று தெரியவந்தது. அவருடைய உரிமத்தை கைப்பற்றி இந்த வழக்கில் தாக்கல்செய்யவில்லை என்றால் கைப்பற்றினேன். நீதிமன்றத்திற்கு கொடுக்கவில்லை. 02-ஆம் எதிரி தருமபுரி மாவட்டத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். 02-ஆம் எதிரிமீது நடவடிக்கை எடுக்க தருமபுரி மாவட்ட வருவாய் அலுவலரிடம் அனுமதி பெறவில்லை என்றால் சரிதான்.

சான்றாளர் சகுந்தலா சொல்லியுள்ள வாக்குமூலத்தில் 02-ஆம் எதிரியிடமிருந்து 01-ஆம் எதிரி துப்பாக்கி வாங்கினார் என்று கேள்விப் பட்டதாக சொல்லவில்லை என்றால் சரிதான். 02-ஆம் எதிரியை கைது -செய்ததற்கான கைதுக் குறிப்பாணையில் கைதுசெய்யப்பட்ட நபரிட -மிருந்து அல்லது அவரது இருப்பிடத்திலிருந்து பறிமுதல் செய்யப்பட்ட ஆயுதங்கள் மற்றும் பிற பொருட்கள் என்ற பகுதியில் எதுவும் எழுதப்படவில்லை என்றால் சரிதான். அந்த கைது குறிப்பாணை **எதிரி தரப்பு 01-ஆம்** சான்றாவணமாக குறியீடுச் செய்யப்படுகிறது. 02-ஆம் எதிரி ஆசாரி தொழில்செய்கிறார் என்றால் சரிதான். அவரிடமிருந்து நான் கைப்பற்றிய

பொருட்கள் யாவும் சாதாரணமாக ஆசாரி தொழில்செய்பவர்கள் வைத்திருக்கும் பொருட்கள் என்றும் அந்த பொருட்களை இந்த வழக்கோடு சம்மந்தப்படுத்து சிறப்பு காரணம் எதுவும் இல்லை என்றும் இந்த வழக்கில் 02-ஆம் எதிரியை முகாந்திரம் இல்லாமல் சேர்த்திருக்கிறோம் என்றால் சரியல்ல. அதனால்தான் அந்த பொருட்களை பகுப்பாய்விற்கு அனுப்ப-வில்லை என்றால் சரியல்ல. 02-ஆம் எதிரிக்கு உரிமம் அளித்த தருமபுரி மாவட்ட வருவாய் அலுவலரை விசாரித்திருந்தால் உரிமம் அளிக்கப்பட்ட பொருட்கள் சம்மந்தமான பட்டியலை காட்டியிருப்பார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. அவ்வாறு அனுமதி வாங்கியிருந்தால் 02-ஆம் எதிரியை இந்த வழக்கில் சேர்த்திருக்க முடியாது என்றால் சரியல்ல. 02-ஆம் எதிரிக்கு உரிமம் இருந்தது என்று நீதிமன்றத்திற்கு தெரிவித்தால் அவர்மீது குற்றம் எதுவும் இல்லை என்று தெரிந்துவிடும் என்பதால்தான் அந்த உரிமத்தை 02-ஆம் எதிரியிடமிருந்து நான் வாங்கியிருந்தும் இந்த வழக்கில் நீதிமன்றத்தில் தாக்கல்செய்யவில்லை என்றால் சரியல்ல.

02-ஆம் எதிரியை நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் கைதுசெய்யவில்லை என்றும் 02-ஆம் எதிரி தன்னிச்சையாக ஒப்புதலுரை எதுவும் சொல்லவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. 02-ஆம் எதிரிக்கு எதிரான ஆவணங்களை காவல் நிலையத்தில் வைத்து புனைந்தோம் என்றால் சரியல்ல. 02-ஆம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**01-ஆம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

01-ஆம் எதிரி தரப்பில் இளநிலை வழக்குரைஞர் தோன்றியிருந்தார். குறுக்குவிசாரணை செய்யவில்லை.

Sd/-V. Pugazhenthi, B.L.,
Additional District&Session Judge,
Salem.